# கவிதை உலக நாயகர்களின் சமூகச்சிந்தனைகள்

132

**ச. சந்தியா**

**பூ சா கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை**

**ஆய்வுச் சுருக்கம்**

கவிதை என்பது ஓர் அழகான மயில் சிறகினைப் போன்றது. தொல்காலம் முதல் தற்காலம் வரை ப் பல கவிஞர்கள் தோன்றி உள்ளார்கள். கவிதை என்னும் ஆயு தம் கொண்டு சமூகத்தில் உள்ள அனைத்து ப் பிரச்சனைகளையும் அழகாகவும் ஆழமாகவும் எடுத்துரைத்துள்ளார்கள். நாம் செய்யும் ஒரு குற்றத்தை க் கூட யாரேனும் எடுத்துக்கூறினால்பலருக்கும்விருப்பமற்றசொல்லாகமாறும். ஆனால்கவிதையின்மூலம்எந்தஒருசிந்தனைகூறினாலும்அதுஅனைவரும் ரசிக்கும் வகையில் இருக்கும். இக்காரணத்தாலே கவிஞர்கள் கவிதை உலக நாயகர்களாக த் திகழ்கிறார்கள். காதல் கவிதைகள் எழுதிக் கொண்டு இருந்த காலம் மாறி ச் சமூகம் சார்ந்த சிந்தனைகளும் கவிதையில் இடம் பெறும் வகையில் தற்காலக் கவிதைகள் அமைகிறது.

**ஆய்வு நோக்கம்**

கவிதை உலக நாயகர்களான தமிழன்பன், கவிஞர் இசை, மு. மேத்தா ஆகியவர்களின் கவிதைகளில் காணலாகும் சமூக ச் சிந்தனைகளையும் அதன் வழி உணர்த்த லாகும் கருத்துக்களையும் ஆராய்ந்து உரைப்பதே ஆய்வின் நோக்கமாகும்.

**முன்னுரை**

தமிழ் இலக்கியப் பரப்பில் இக்கால இலக்கியத்தில் உள்ளடக்கியுள்ள கவிதை நூல்கள் சமூக சிந்தனைகளில் முதன்மையானதாகவும் திகழும் கவிஞர் மு.மேத்தா , கவிஞர் இசை , கவிஞர் தமிழன்பன் இவர்களின் கவிதைகள் சிறப்புப் பெற்றுத் திகழ்வதற்கு ப் பல காரணங்கள் உண்டு. தற்கால இலக்கியத்தில் கவிதைகள் வெறும் அலங்காரச் சித்தரிப்புகள் மட்டுமல்ல மக்கள் வாழ்வின் நிகழ்வுகளை யும் எதிர்காலச் சமுதாயத்திற்கான வழிகாட்டியாகும்.

**சமுதாயமும் கவிஞனும்**

சமுதாயத்தில் அன்றாட வாழ்வில் நாம் காணும் பல்வேறு அவலங்களைக் கவிஞனும் காண நேரிடுகிறது. தான் கண்ட சமுதாய அவலங்களைத் தன் கவிதைகள் மூலம் பதிவு செய்து வெளிப்படுத்தி மக்களை விழிப்படையச் செய்யும் பெரும் பொறுப்பு கவிஞனுக்கு உண்டு.

“கவிஞர் என்பவர் காட்டிலோ , குகையிலோ, தன்னந்தனியே வாழ்ந்துவரும் சித்தர் அல்லர் , சமுதாயத்தின் மக்களோடு மக்களாய் ஒன்று சேர்ந்து வாழ்ந்து வரும் உறுப்பினரே ஆவார். எனவே , அவரது கவிதைகளில் சமுதாய நிகழ்வுகள் , சமுதாய அவலங்களின் தாக்க ம், சமுதாய நலன்களின் மீதான அக்கறை , புதிய சமுதாயம் பற்றிய சிந்தனைகள் கட்டாயம் இருந்தே தீரும்" (இரா. மோகன் காந்தியக் கவிஞருடன் ஒரு கை குலுக்கல், பக். 64 – 65) என்ற அறிஞரின் கருத்து இங்கு சிந்திக்கத் தக்கதாகும். கவிஞன் தான் காணும் சமுதாய நிகழ்வுகளையே கவிதையாக்குகி றான். சமுதாயத்திலிருந்து தான் பெற்ற அனுபவங்களை வெளியிடுவதோடு, சில சமயங்களில் பிரச்சனைகளால் நேரும் அவலங்களையும் கவிஞன் வெளிப்படுத்தி வருகிறான் என்பதைப் பல்வேறு கவிதைகள் உணர்த்தி வருகின்றன .

“சமுதாய நோக்கோடு பாடப்பட்ட கவிதைகளில் மக்களின் நிலை , அவர்களின் போக்கு , அவர்தம் பொருளாதாரம், அரசியல் போன்ற நாளும் வாழ்வோடு தொடர்புடைய கூறுகளே அதிகம்" (இல.செ.



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

கந்தசாமி, புதுக்கவிதை ஒரு பார்வை. பக். 13) என்ற அறிஞரின் சிந்தனை இங்கு ஒப்பு நோக்குதற்குரியதாகும்.

சமுதாயத்தில் நிலவும் பல்வேறு அவல நிகழ்வுகள் மக்களை எந்தெந்த வகைகளில் பாதிப்புக்குள்ளாக்கி வருகின்றன என்பதனைப் படம்பிடித்துக்காட்டி வருவதில் புதுக்கவிதைகள் முன்னணியில் விளங்குகின்றன.

“சமுதாயத்தில் பாதிக்கப்பட்டோர் பக் கமெல்லாம் தமிழ்க்கவிதை பாய்ந்தோடி , அவர் தம் உணர்வலைகளை உலகோர்க்கு உணர்த்தும் ஆற்றல் பெற்று நிற்றலைப் பரக்கப் பார்க்க முடிகின்றது" (பி.யோகீஸ்வரன், அறுபதாண்டுத் தமிழ்க்கவிதை , 1920-1980, கழக மணிவிழா மலர் , ப. 73) என்ற அறிஞரின் கருத்து நோக்கத்தக்கது.

கவிஞர் மு. மேத்தாவின் கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள்

நம் சமுதாயத்தில் மக்களின் இயல்பான வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

“நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த மனிதனுக்குக் காதல் , வேலை வாய்ப்பு , வறுமை, வரதட்சனை, விலைவாசி, சம்பள உயர்வு என்று பல்வேறு விதமான பிரச்சனைகள் இருக்கின்றன. இச்சூழ்நிலைகளில் அவனுக்கு நேரும் உணர்பனுபவங்களை இன்றையப் புதுக்கவிஞர்கள் வெளியிடுகின்றனர்" (பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை , ப. 85) இத்தகைய அவலங்களைப் பொரு த்தமான உவமைகள் வாயிலாகவும், படிப்போர் மனதில் பதியுமாறும் எடுத்துக் கூறுவதில் கவிஞர் மு. மேத்தா பிற புதுக்கவிஞர்களிலிருந்து வேறுபடுகிறார்.

மு. மேத்தாவின் கவிதைகள் பற்றிச் சிலம்பொலி சு. செல்லப்பன் குறிப்பிடுகையில் , “மேத்தாவின் எழுதுகோலில் இருப்பது மனமயக்கம் செய்யும் மது அல்ல , மக்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் , அந்தக் கண்ணீரால்தான் அவர் எழுத்துப் பூக்களை மக்களின் மனத்தாள்களில் பதிவு செய்கிறார்" (சிலம்பொலி செல்லப்பனார் , தோழமை உரை , மு. மேத்தா , களவுக் குதிரைகள் , ப. 5) எனக் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கதாகும்.

தனது கவிதைகளைப் பற்றி மு. மேத்தா குறிப்பிடுகையில் , “கவிதை என்பது தனிமனிதனுடையது தான் என்றாலும் அதில் உள்ள வேகம் அல்லது சோகம் அந்தக் கவிதையில் ஏற்படுகின்ற பெரியநெருப்பு அல்லது சிறிய பனிக்கட்டி இதைக் கொடுப்பது சமூகமே" (மு. மேத்தா , இதய வாசல் , ப. 61) எனக் குறிப்பிடுதல் நோக்கத்தக்கதாகும்).

**கவிஞர் இசையின் சமூகச் சிந்தனைகள்**

வித்தியாசமான சிந்தனை யையும் விந்தையான கருத்துகளையும் உள்ளடக்கிய கவிதை நூல்தான் கவிஞர் இசை அவர்களின் "உடைந்து எழும் நறுமணம்" என்னும் கவிதை நூல்.இக்கவிதைகளில் இசை அவர்கள் ஏராளமான பல்சுவை ச் சிந்தனைகளை ப் புகுத்தியுள்ளார். இப்பூமியில் மனிதர்கள் முதல் செல்ல ப் பிராணிகள், நம்மை உயிர்ப்பிக்கும் இயற்கை , கடவுள் நம்பிக்கைஎன தன் வாழ்வில் நிகழ்ந்த , தான் கண்டு வியந்த, ரசித்த பல்வேறு நிகழ்வுகளைக் கவிதை எனும் முத்துச் சிதறல்கள் மூலம் பகிர்ந்துள்ளார் இசை.

"உடைந்து எழும் நறுமணம்" எனும் பெயரைக் கேட்டவுடன் அனைவரும் நறுமணம் சார்ந்த பொருளைப் பற்றியது என்றும் எண்ணுவர். ஆனால் இசை அவர்கள் தான் இயல்பான வாழ்க்கை எளிமையான முறையில் வெளிப்படுத்துவது போன்று " கை தவறவிட்ட தேநீர் யாருக்கும் பயனில்லை மாறாக கடைக்காரருக்கு நட்டம் ஏற்படுத்தும் என்ற பொதுச் சிந்தனையை உணர்த்த முனைகிறார்.

உடைந்த தேநீர் குவளைக்கும் தேநீருக்கும் பணம் கொடுக்கும் போது கடைக்காரர் சிரித்துக் கொண்டே வாங்க மறுத்தது தான் மனிதச் சமூகத்தின் ஒரு விந்தையாக ஆசிரியர் உணர்த்தியுள்ளார். மேலும் அதில்,



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

" நான்
மனம் உவந்தே அளித்தேன்
அவன்
மனம் உவந்தே மறுத்தான்
கைதவறிக் கிட்டிய
மனம் உவந்த நான் இன்"

**(ப. எண் –43நூ.பெ - உடைந்து எழும் நறுமணம்)**

என்று கைத்தவறி உடைந்த தேநீருக்காக ஒரு நல்ல மனம் பரிசாக கிடைத்ததை ப் பாராட்டும் விதமாக உட்தலைப்பாகவும் வைத்து நூலின் பெயராகவும் சூட்டியுள்ளார்.

**தமிழன்பன்கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள்**

தமிழன்பன் கவிதைகளில் சமூகம் சார்ந்த பல கருத்துகளையும் எடுத்துரைத்துள்ளார். நாட்டுப் பற்றுநிறைந்த கவிதைகளின் மீது இவர் தனித்தன்மை உடன் திகழ்கிறார்.

"எல்லாம் தோன்றிய
இந்த நாட்டில்
எனக்கு வாழ்க்கை மட்டும்
தோன்றலையே
என்றா கேட்கிறாய்?
போய்விடு வெளியே
தாய் நாட்டைப் பழிக்காதே"

என்ற பகுதியில் வாழ்க்கையை நாம் தான் அமைத்துக் கொள்ள வேண்டும். எல்லா வளத்தையும்வசதிகளையும் கொடுக்கும் தாய்நாட்டைப் பழிப்பவர்களைக் குறைகூறக் கூடாது என்பதை அழுத்தமாகக் கூறியிருப்பார்.

இதைப்போன்றுநாட்டுப்பற்று, ஒருமைப்பாடு, கல்வியின்அவசியம், அரசுபொது மருத்துவமனையின் நிலை, நூலகத்தின் இன்றியமையாமை என ப் பல தலைப்புகளில் உலகிற்கு வேண்டிய கருத்துச் சிந்தனைகளைக் கூறியுள்ளார்.

**முடிவுரை**

கவிதை என்பது ஓர் அழகான மொழி நடையை க் கொண்ட கருவிஆகும். இவ்வுலகில் உள்ள மனிதர்களுக்கு எந்த ஓர் கருத்தையும் அழகான முறையில் கூறினால் அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். இவ்வாறு சிறப்பு பெற்ற தற்கால க் கவிதை உலகின் நாயகர் சமூக ச் சிந்தனை உடனிருப்பது நாளை ய எதிர்காலத்தின் சிறந்த வாழ்க்கையையும் நல்ல சமுதாயம் அமையவும் இன்றைய வழிகாட்டிகளாகிய நாம் ஆய்வின் நாயகர்கள் ஆவார்கள். இதுவே என் ஆய்வின் முடிவாகும்.

**துணை நூற்பட்டியல்**

| வ. எண் | நூல் பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 1. | **காந்தியக் கவிஞருடன் ஒரு கை குலுக்கல்** | இரா. மோகன் |
| 2. | புதுக்கவிதைஒருபார்வை | இல.செ. கந்தசாமி |
| 3. | அறுபதாண்டுத் தமிழ்க்கவிதை (கழக மணிவிழா மலர்) | பி.யோகீஸ்வரன் |
| 4. | புதுக்கவிதைஒருபுதுப்பார்வை | பாலா |
| 5. | மு. மேத்தா கனவுக்குதிரை | சிலம்பொலி செல்லப்பனார் |
| 6. | இதய வாசல் | மு. மேத்தா |
| 7. | கண்ணீர்ப் பூக்கள் | மு. மேத்தா |
| 8. | காலத்திற்கு ஒரு நாள் முந்தி | தமிழன்பன் |
| 9. | உடைந்து எழும் நறுமணம் | கவிஞர் இசை |